செ.வெ.எண்.28/2021 நாள்.14.09.20221

# பத்திரிக்கை செய்தி

## உலகிலேயே முதன்முறையாக

## 30 நாட்களில் பல்வேறு இடங்களில் அதிகமான பண்ணைக் குளங்கள் உருவாக்கிய உலக சாதனை

Most Farm Ponds Created at Multiple Locations in 30 Days

நாம் வாழ்கின்ற பூமித்தாய்க்கும், சுற்றுச் சூழலுக்கும் பாதுகாப்பு கொடுக்கும் நோக்கத்திலும், பசுமை மற்றும் இயற்கையோடு மனித குலம் ஒன்றி வாழ வீணாகும் மழை நீரினை 100% நமக்கு தேவையான விதத்தில் எவ்வாறு உபயோகிக்கலாம் என்கிற விழிப்புணர்வுக்காகவும் தமிழ்நாடு அரசின் உறுதுணையோடு திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகம் மாபெறும் உலக சாதனை படைத்திருக்கின்றது.

திருவண்ணாமலை மாவட்டம் கோடை காலத்தில் மிகுந்த வறட்சி, குடிநீர் பற்றாக்குறை, உழவின்னை என பல சிக்கல்களை சந்தித்து வருகின்றது. இதற்கு தீர்வு காணும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தின்படி மழை நீரினை தேக்கி வைத்து உபயோகிக்க திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (DRDA – District Rural Devolopment Agency) யின் கீழ், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் பணியாளர்களை ஈடுபடுத்தி மாவட்டம் முழுவதும் 1121 பண்ணைக்குளங்களை (Farm Ponds) அமைத்து “முப்பது நாட்களில் பல்வேறு இடங்களில் அதிகமான பண்ணைக்குளங்கள் உருவாக்கிய உலக சாதனை” எனும் மாபெறும் உலக சாதனையை படைத்துள்ளோம்.

இந்த மகத்தான உலக சாதனையை மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, அவர்களின் வழிகாட்டுதலின்படி 12.08.2021 தேதியன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு.பா.முருகேஷ்.இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள். மாவட்ட கூடுதல் ஆட்சியர் திரு.மு.பிரதாப்.இ.ஆ.ப., அவர்கள் கண்காணிப்பில் திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி வளர்ச்சி முகமையின் உதவியோடு மாவட்டம் முழுவதும் தேர்தெடுக்கப்பட்ட 541 பஞ்சாயத்துக்களில், அந்தந்த பகுதி விவசாயிகளின் வேளாண் நிலத்தில், அவர்களின் ஒப்புதலோடு 1121 பண்ணைக்குளங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. 30 நாட்களில் அதாவது, 10.09.2021 ஆம் தேதிக்குள் 1121 பண்ணைக்குளங்களும் உருவாக்கப்பட்டு அந்தந்த விவசாயிகளின் வசம் தமிழக அரசு ஒப்படைத்துள்ளது.

ஒவ்வொரு பண்ணைக்குளமும் 72 அடி நீளம், 36 அடி அகலம், 5 அடி ஆழம் எனும் அளவில் 3,64,000 லிட்டர் மழைநீரினை தேக்கி வைக்கும் அளவு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்ணைக்குளங்களின் மூலம் 40.69 கோடி லிட்டர் தண்ணீரினை தேக்கி வைக்க இயலும். மழைக்காலத்தில் வீணாக ஆவியாகும் மழை நீரினை இந்த பண்ணைக் குளங்களில் தேக்கி வைத்தால் குடிதண்ணீர் தேவையில் தன்னிறைவடைந்த பகுதியாக திருவண்ணாமலை மாவட்டம் மாறிவிடும். நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

இந்த பண்ணைக்குட்டை விவசாயத்திற்கு மட்டுமின்றி, விவசாயிகள் விருப்பப்பட்டால், மீன் வளத்துறையின் மூலமாக மீன்கள் வளர்த்து, அதிலும் வருமானம் கிடைக்கும் வண்ணம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்திய துணைக்கண்டத்தில் வேறு எந்த மாவட்டமும் செய்திடாத இந்தப் புதிய முயற்சியை எலைட் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் (USA-LLC) உலக சாதனை நிறுவனத்தின் ஏஷியா பசி∴பிக் அம்பாஸிடர் திரு.கார்த்திகேயன் ஜவஹர் மற்றும் சீனியர் அட்ஜூடிகேட்டர் திரு.அமீத் K.ஹிங்கரோனி அவர்களும், ஏசியன் ரெக்கார்ட்ஸ் அகாடமி (UAE) நிறுவனத்தின் இந்தியன் அம்பாஸிடர் Dr.A.K.செந்தில்குமார் மற்றும் சீனியர் அட்ஜூடிகேட்டர் திரு.B.சிவக்குமரன் அவர்களும், இந்தியா ரெக்கார்ட்ஸ் அகாடமி நிறுவனத்தின் அஸோஸியேட் எடிட்டர் திரு.P.ஜெகன்நாதன் மற்றும் ரெக்கார்ட்ஸ் மேனேஜர் திரு.K.S.கார்த்திக் கனகராஜீ அவர்களும், தமிழன் புக் ஆ∴ப் ரெக்கார்ட்ஸ் நிறுவனத்தின் சீனியர் ரெக்கார்ட்ஸ் மேனேஜர் Dr.B.பாலசுப்பரமணியன் அவர்களும் நேரில் ஆய்வு செய்து “30 நாட்களில் பல்வேறு இடங்களில் அதிகமான பண்ணைக்குளங்கள் உருவாக்கிய உலக சாதனை” (Most Farm Ponds Created at Multiple Locations in 30 days) என அங்கீகாரம் வழங்கி அதற்கான உலச சாதனை சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் திரு.பா.முருகேஷ்.இ.ஆ.ப., அவர்களிடமும், கூடுதல் ஆட்சியர் திரு.மு.பிரதாப்,இ.ஆ.ப., அவர்களிடமும் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். உடன் மாவட்ட கண்காணிப்பாளர் திரு.பவன்குமார் ரெட்டி. இ.கா.ப., பயிற்சி ஆட்சியர் கட்டா ரவி தேஜா,இ.ஆ.ப.,இணை இயக்குநர் வேளாண்மைத்துறை திரு.முருகன், துணை இயக்குநர் தோட்டக்கலைத்ததுறை திரு.சிதம்பரம் ஆகியோர் உடனிருந்தனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த சாதனை நிகழ்வு திருவண்ணாமலை மாவட்டத்திற்கும்,தமிழகத்திற்கும், இந்திய நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் நிகழ்வாகும். உலக வரலாற்றிலேயே முதன்முறையாக நிகழ்த்தப்பட்ட மாபெரும் மக்கள் சேவை நிகழ்வு என்பதாலும், மற்ற மாவட்டங்களுக்கும் இந்த தன்னிறைவு கிடைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.முருகேஷ்,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை